# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No.** 75/2015 **Date**: 12.06.2024

**PW**1- கோபால்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இத்தாவாவிற்கு முன்பு நான் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பு பி.வா.சா.ஆ.1. தாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி உள்ளது என்றால் என் தாத்தா பெயரில் உள்ளது. ஆனால் அந்த வீட்டிற்கு நான் வரி செலுத்தியதில்லை. அந்த வீட்டின் மின் இணைப்பு எண். 806. அது என் பெயரில் தான் உள்ளது. அந்த வீட்டிற்கு குடிநீர் இணைப்பு இல்லை. அந்த வீடு இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது நான் கட்டினேன் என்றாலும் அதனால் தான் நான் இடிக்கவேண்டும் என்று பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் சரிதான். 2 வது அயிட்ட சொத்தின் பட்டா எண் தெரியாது. என் தாத்தா பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த பட்டாவில் வேறு நபர்கள் பெயர் உள்ளதா என்று எனக்கு தெரியாது. அந்த பட்டாவில் பெயர் உள்ளவர்கள் இத்தாவாவில் சேர்க்காத காரணத்தால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தில் என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட நிலத்தின் மொத்த விஸ்திரணம் தெரியாது. அதில் கொஞ்சம் நிலத்தை என் தாத்தாவும் அப்பாவும் சேர்ந்து விற்றுவிட்டார்கள். அந்த பணத்தில் இருந்துதான் குமாரபாளையத்தில் மூன்று கடைகளை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன் விஸ்திரணம் 660 சதுரடி. அந்த பணத்தில் தான் 407 வேனும் என் அப்பா வாங்கி ஓட்டிவந்தார் என்றால் சரிதான். 3ம் வாதி ஈச்சர் வாகனம் வைத்து ஓட்டி வருகிறார் என்றால் சரிதான். அது அவருடைய சொந்த வாகனம். என் பெயரில் எந்த வாகனமும் இல்லை. குமாரபாளையம் கடைகளுக்கு 3ம் வாதி சொத்து வரி, தண்ணீர் வரி செலுத்திவருகிறார் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வெவ்வேறு ஊர்களில் வசிக்கிறோம் என்றால் சரிதான். 1ம் வாதி 2 வது அயிட்ட சொத்தில் என் அம்மாவுடன் வசிக்கிறார். குமாரபாளையம் கடைக்கு நான் இதுவரை சொத்துவரி தண்ணீர் வரி செலுத்தியதில்லை. 2 வது அயிட்ட சொத்திற்கு பிரதிவாதிகள் இதுவரை எந்த வரியும் செலுத்தியதில்லை. ஒருவர் குடியிருக்கும் சொத்திற்கு மற்றவர் எந்த வரியும் செலுத்துவதில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி வீடு கட்டிய தேதியை குறிப்பிட்டு

நான் எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 2 வது அயிட்ட சொத்தில் உள்ள வீட்டை தாவாவில் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயன்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சின்னதம்பி, அய்யாசாமி, கண்ணாமூச்சி, அங்கப்பன், முனுசாமி ஆகியோர் மூலமாக தாவா சொத்தை பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்டேன். மேற்படி நபர்களை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். 04.05.2012 ல் பஞ்சாயத்து நடந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டு மூன்று குடும்பமும் தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதில் 1 வது அயிட்ட சொத்து 3 ம் பிரதிவாதிக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது என்றாலும், அதில் பாகம் கேட்கும் உரிமை எனக்கு இல்லை என்றாலும் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்திலும் குமாரபாளையம் கடைகளிலும் பிரதிவாதிகள் எப்போதும் பாகம் கேட்டதில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-கோபால்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.